# எத்தனை சூழ்ச்சிகள் - தடைகள் வந்தாலும் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம்!

## தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறீதரன் சபதம்

கட்சிக்கு எதிராக எந்தச் சூழ்ச்சிகள், தடைகள் வந்தாலும் மக்களின் ஆத்ம பலத்துடன் அதனை முறியடிப்போம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் மாநாட்டுக்குத் தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளை அடுத்து இரு மாவட்ட நீதிமன்றங்களாலும், மாநாட்டுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கட்சியின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"எந்த வழக்கையும் எதிர்கொள்ளத் தயார். எமக்கு எதிரான சூழ்ச்சிகள், தடைகளை நாம் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம்.

என்னையும் எனது கட்சியையும் குழப்பும், அச்சுறுத்தும் வகையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டு நாம் அஞ்சப் போவதில்லை.

என்னைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியையும் எமது மக்களையும் இப்படியான சூழ்ச்சிகளால் முடக்க முடியாது. எத்தனை வழக்குகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். நீதி நிச்சயம் வெல்லும்" - என்றார். (அ)




# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 04 வெள்ளிக்கிழமை 16.02.2024 கதிர் 183









## யாழில் சிறீதரனை நேரில் வாழ்த்திய அமைச்சர் ஜீவன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீதரனின் இல்லத்தில் இந்தக் கலந்துரையாடல் இன்று காலை 2➤

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அமைச்சர் ஜீவனும் பங்கேற்பு

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார், முப்படையினர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)



## தலைமன்னாரில் பத்து வயது சிறுமி வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை



மன்னார், தலைமன்னார் கிராமத்தில் 10 வயதான சிறுமி ஒருவர் நேற்று இரவு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2➤

## கண்ணீர் வரவழைக்கும் வெங்காயத்தின் விலை நேற்று முதல் 90 ரூபாவால் சடுதியாக அதிகரிப்பு!

### உண்மையை கண்டறியுமாறு கோரிக்கை

சந்தையில் 330 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை நேற்று சடுதியாக நேற்று (15) 420 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயத்திற்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டமை மற்றும் பாகிஸ்தான் பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்தமை ஆகிய காரணங்களினாலேயே இவ்வாறு வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 420 - 440 ஆக இருப்பதாகவும் , இதே நிலை நீடித்தால் ஒரு கிலோவின் சில்லறை விலை 600 ரூபாவாக உயரும் எனவும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் மொத்த வியாபாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலையை சடுதியாக 90 ரூபாவினால் அதிகரித்தமையின் உண்மை காரணம் எதுவென கண்டறிய வேண்டும் எனவும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கட்டுப்பாடின்றி இவ்வாறு திடீர் திடீரென அதிகரிக்குமாயின் ஒரு நாட்டிற்கு 2➤

## சந்நிதியில் விற்ற குளிர்களியில் தவளை விற்பனையாளருக்கு 5000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம் - செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் விற்பனை செய்யப்பட்ட குளிர்களிக்குள் (ஐஸ் கிறீம்) தவளை காணப்பட்டமை தொடர்பிலான வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட விற்பனையாளருக்கு நீதிமன்றம் 5,000 ரூபாய் தண்டம் விதித்துள்ளது

கடந்த புதன்கிழமை ஆலயச் சூழலில் குளிர்களி விற்பனையில் ஈடுபட்டவரிடம், அதனை வாங்கிய நபர் ஒருவரின் குளிர்களிக்குள் தவளை ஒன்று காணப்பட்டது.

அது தொடர்பில் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த வல்வெட்டித்துறை சுகாதாரப் பரிசோதகர், ஐஸ் கிறீம் விற்றவருக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

குறித்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குளிர்களியை விற்பனை செய்தவர், குளிர்களியில் தவளை இருந்ததை ஒப்புக்கொள்வதாகவும், சுன்னாகம் பகுதியில் இயங்கும் குளிர்களி தயாரிப்பு நிறுவனத்திடம் கொள்வனவு செய்தே ஆலயச் சூழலில் தான் விற்பனை 2➤

## பத்தாவது தேசிய சாரணர் ஜம்போரி திருமலையில் பெப்20 முதல் 26 வரை

### 20,000 சாரணர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்ப்பு

பத்தாவது தேசிய சாரணர் ஜம்போரி திருகோணமலையில் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரையில் சுமார் 20,000 சாரணர்களின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளதாக இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம சாரணர் ஆணையாளர் ஜானபிரித் பெர்னாண்டோ தெரிவித்தார்.

"மாற்றத்திற்கான தலைமைத்துவம்" என்ற தொனிப்பொருளில் ஜம்போரியின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி இலங்கையின் முதன்மைச் சாரணரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பிரதம ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய ஜம்போரிக்கு பல நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 500 குருளைச் சாரணர்கள், 2➤

# குருமண்வெளியில் ரன்விமன வீடு பயனாளியிடம் கையளிப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் குருமண்வெளி -11, மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரன்விமன வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் நேற்று (15) அவ்வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை சமூக ரீதியாக மேலுயர்த்துவது மற்றும் வீடற்றவர்களுக்கு வீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டு ரன்விமன வீட்டு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் கீழ் திருமதி. கருணாகரமூர்த்தி ராதிகா என்பவருக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 750,000/- வழங்கப்பட்டிருந்ததோடு, பயனாளியின் பங்களிப்பாக ரூபா 1700,000/-வுமாக மொத்தம் 2450,000/- செலவில் இவ்வீடு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

வீட்டைக் கையளிக்கும் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி. சத்தியகௌரி தரணிதரன், தலைமையக முகாமையாளர் திருமதி. புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி. விமலராணி யோகேந்திரன், எருவில் வங்கி முகாமையாளர் எஸ். ஆனந்தமோகன், சமூக அபிவிருத்தி உதவியாளர் தெ. உதயசுதன், கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி. நிரோசினி பிரசாந்த, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பே. அச்சுதன், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி. மதனப்பிரியா சுந்தரலிங்கம், எஸ். ஜெயகாந்தன், அலுவலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆலய நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உயிருடன் இருப்பவர்களின் பெயர்களை பாடசாலைகளுக்குச் சூட்டத் தடை!

(ஏ.எம்.ஆஷிப்)

உயிருடன் இருக்கும் அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு நபர்களின் பெயர்களை பாடசாலைகளில் இருந்து நீக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த பணித்துள்ளார். இனிமேல் உயிருடன் இருக்கும் யாருடைய பெயரையும் பாடசாலைகள் மற்றும் கட்டிடங்களுக்கு பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாகாண ஆளுநர்களையும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு நபர்கள் உயிருடன் இருக்கும் போதே இவ்வாறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசியல்வாதிகள் உள்ளிட்ட தனி நபர்களின் பெயர்களை அரச பொதுக் கட்டிடங்கள், பாடசாலைகள், வீதிகள் மற்றும் மைதானங்கள் உள்ளிட்ட எந்தவொரு அரச சொத்துக்களுக்கும் சூட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உதவி வழங்குகிறோம் என்ற போர்வையில் அரசியல்வாதிகள் பாடசாலைகளுக்குச் சென்று அரசியல் பேச்சுக்களை நடத்துவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

# 2024 ரீடு போட்டித் தொடர் திகதி விபரம் வெளியானது!

2024 ஆம் ஆண்டுக்கான எல்பிஎல் போட்டித் தொடர் ஜுலை மாதம் நடைபெறும் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஜுலை முதலாம் திகதி முதல் ஜுலை 21ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதல் சுற்றில் 20 போட்டிகளும் இறுதிச் சுற்றில் 4 போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

லங்கா பிரிமியர் லீக் போட்டித் தொடர் இம்முறை ஐந்தாவது தடவையாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுங்கத் திணைக்களத்தினரின் தொழிற்சங்க நடவடிக்கை முடிவு

சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்கங்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டபடி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே தொழிற்சங்க நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதாக சுங்கச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## பத்தாவது தேசிய சாரணர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் சாரணர்கள் மற்றும் திரிசாரணர்கள் ஆகியோரும் ஒன்றுகூடுவார்கள் எனவும், ஜம்போரி வரலாற்றில் முதல்முறையாக பெண் சாரணர்களும் இம்முறை முகாமிடுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெப-38)

## சந்நிதியில் விற்ற குளிர்களியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து விற்பனை செய்தவருக்கு 5,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

இதேவேளை சந்நிதி ஆலய சூழலில் சுகாதார சீர்கேட்டுடன் நடாத்திச் செல்லப்பட்ட உணவகம் ஒன்றிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் உணவக உரிமையாளருக்கு 36,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்நிதி ஆலயத்திற்குத் தினமும் வழிபாட்டிற்காகவும், சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் திருமண நிகழ்வுகளுக்காகவும் பல நூற்றுக்கணக்கானவர்கள் வருகை தருகின்றனர்.

அவர்கள் ஆலயச் சூழலில் உள்ள உணவகங்களில் சிற்றுண்டிகள், குளிர்பானங்களைக் கொள்வனவு செய்கிறனர். அதனால், ஆலயச் சூழலில் உள்ள உணவகங்கள் மற்றும் குளிர்பான விற்பனை நிலையங்களின் சுகாதாரத்தை சுகாதார பரிசோதகர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும், என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (01)

## கண்ணீர் வரவழைக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சோ அல்லது தேசிய நுகர்வோர் அதிகார சபையோ தேவை தானா? என தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் கேள்வி எழுப்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-37)

## தலைமன்னாரில் பத்து வயது சிறுமி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமன்னார் கிராமம் பகுதியில் தோட்டம் ஒன்றைப் பராமறிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்ட நபர் ஒருவராலேயே மேற்படி சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

அந்த நபர் மற்றும் அவரது மனைவி தலைமன்னார் பகுதியில் வசித்து வந்த நிலையில் கணவன் போதைக்கு அடிமையான நிலையில் மனைவி பிரிந்து சென்றுள்ளார்.

இந்தநிலையில் அருகில் இருக்கும் பெண் ஒருவர் சந்தேகநபருக்கு உணவு வழங்கி வந்த நிலையில், அவர்களுடன் சந்தேகநபர் நட்பாகப் பழகி வந்துள்ளார்.

சந்தேகநபர் நேற்று மாலை உணவு வழங்கும் பெண்ணின் பேத்தியான மேற்படி சிறுமியைக் கடைக்கு அழைத்துச் சென்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அருகில் இருந்த சி.சி.ரி.வி. கமராக்களின் உதவியுடனும், ஊர் மக்களின் உதவியுடனும் மேற்கோண்ட தேடுதலின்போது சிறுமியின் சடலம் இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தலைமன்னார் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## யாழில் சிறீதரனை நேரில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

நீர் வழங்கல் தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அதேவேளை, மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காகத் தான் தொடர்ந்து குரல் கொடுக்கின்றார் என்றும், தமது கட்சியின் ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்றும் சிறீதரன் எம்.பி. உறுதியளித்துள்ளார். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தகுதிவாய்ந்த அதிபரை நியமிக்க கோரி பெற்றோர் போராட்டம்!



திருகோணமலை, கிண்ணியா வலயக் கல்விகுட்பட்ட தி.கி.இஹ்ஸானியா வித்தியாலய பெற்றார்கள் மற்றும் நலன் விரும்பிகள் இன்று கிண்ணியா - கொழும்பு பிரதான வீதியில் உள்ள பாடசாலையின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகுதி வாய்ந்த அதிபர் ஒருவரை தங்கள் பாடசாலைக்காக நியமித்து தருமாறு பெற்றார் மற்றும் நலன் விரும்பிகள் பதாகைகள் ஏந்திய நிலையில் இந்தப் போராட்டத்தில் பலந்துகொண்டனர்.

13 வருடங்களுக்கு மேலாக மாணவியர்களினது கற்றல் கற்பித்தல் நடவடிக்கை வருடத்திற்கு வருடம் சீரற்று காணப்படுகின்மையையும், அத்துடன் மாணவிகளின் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதையும் பெற்றார் மற்றும் நலன் விரும்பிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

எனவே, பாடசாலைக்கு தற்காலிகமாக நியமனம் பெற்றுவந்த அதிபரையாவது உடனடியாக நிரந்தரமாக்கித் தருமாறு கேட்டு பெற்றார்கள் மற்றும் நலன் விரும்பிகள் பாடசாலைக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஒலுவில் அல் ஹம்றா மாணவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கு விஜயம்!



(நூருல் ஹுதா உமர்)

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை சூழவுள்ள மாணவர்களும் தங்களது அறிவுவிருத்திக்கு பயன்படுத்த அனுமதிக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிந்தனையின் கீழ் ஒலுவில் அல்- ஹம்றா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் நேற்று (15) கலை கலாச்சார பீடம், தொழிநுட்பவியல் பீடம் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த நூலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை பார்வையிட்டதுடன் கலை கலாச்சார பீடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்விலும் கலந்துகொண்டனர்.

கலை கலாச்சார பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அறிவுசார் செயலமர்வில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் பிரதான பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வின்போது தொழிநுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி யூ.எல். அப்துல் மஜீட், கலை கலாச்சார பீட சமூகவியல் துறையின் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.றிஸ்வான் ஆகியோரும் மாணவர்களின் உளவள விருத்தியோடு சம்மந்தப்பட்ட உரைகளை ஆற்றினர்.

அல்- ஹம்றா வித்தியாலய அதிபர் அஷ்-ஷெய்க் யூ.கே. அப்துர் றகீம், வலய தலைவர் ஏ.சி. இஸ்மாயில், பிரதி அதிபர் அஹமட் ஜுமான், பிரதி அதிபர் ஜெ. வஹாப்டீன், பிரதி அதிபர் எம்.ஏ. கமறுன் நிஷா, வலய பிரதி தலைவர் எம்.ஏ. அஹமட் பாரிஸ், ஆசிரியர்களான எம்.ஏ.சி.எம். இஹ்சாஸ், எம்.ஐ. முஸ்பிறா, எம்.எஸ்.எம். சத்தார் ஆகியோர் கலந்துகொண்டதுடன் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.ரீ. அகமட் அஷ்ஹர் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக வேலைப்பிரிவு மேற்பார்வையாளர் எஸ்.எம்.வி.எம். அலி அக்ரம் அவர்களும் இவர்களுடன் இணைந்திருந்தனர்.




# மனித யானை மோதல் மேலாண்மை ஆசிரியர் விழிப்புணர்வு நிகழ்ச்சி





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மனித யானை அமைதி - இலங்கை (H.El.P. Sri Lanka) மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து மாபகடவெவ தேசிய விடுமுறை விடுதியில் ஆசிரியர்களுக்கான செயலமர்வை நடத்தியது.

மனித யானை சமாதானம் - இலங்கை அமைப்பின் அனுசரணையுடன் கல்வித் திணைக்களம், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊவா மாகாண அலுவலகத்தின் விழிப்புணர்வுப் பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எஸ். ரம்புக்பொத - நாட்டுப் பணிப்பாளர், எச்.எல்.பி. இலங்கை, எல்.கே.ஏ ஜயசிங்க - பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், வனவிலங்கு பாதுகாபபுத் திணைக்களம் டபிள்யூ.ஏ. மஹிந்த விஜேசிங்க மற்றும் சி.இ.ஏ ஊவா மாகாண அலுவலகத்தின் விழிப்பு ணர்வுப் பிரிவின் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி. டில்கி சந்திரவன்சா ஆகியோர் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் விரிவுரைகளை நிகழ்த்தினார்கள்.

யானைகளின் நடத்தைகள் மற்றும் சுற்றுச்சூழலுடனான அவற்றின் தொடர்பு, யானைகள் மற்றும் மனிதர்கள் (நடைமுறை தொடர்புகள்), யானை மனித மோதலுக்கான காரணங்கள் மற்றும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகள் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

# ஷாபாஸ் ஷெரீப் தலைமையில் அரசு அமைய மேலும் 6 சுயேச்சை எம்.பி.க்கள் ஆதரவளிப்பு


பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சி அமைக்கவுள்ள அரசுக்கு மேலும் 6 சுயேச்சை எம்.பி.க்கள் ஆதரவு அளித்துள்ளனர்.

இது குறித்து அந்த நாடு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

புதிதாக ஆட்சியமைக்கவிருக்கும் பிஎம்எல்-என் கட்சியில் 6 சுயேச்சை எம்.பி.க்கள் இணைந்துள்ளனர். அதையடுத்து, நாடாளுமன்றத்தில் அந்தக் கட்சியின் பலம் 80ஐக் கடந்துள்ளது. ஏற்கெனவே, புதிய அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு தெரிவிப்பதாக பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) அறிவித்துள்ளது. மேலும், பிஎம்எல்-என் அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதாக ஏற்கெனவே அந்தக் கட்சிக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த பிற கட்சிகளும் அறிவித்துள்ளன.

பஞ்சாப் மாகாணத்திலும், முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பிடிஐ ஆதரவுடன் வெற்றி பெற்ற 3 சுயேச்சைகள் பிஎம்எல் என் கட்சியில் இணைந்துள்ளனர். அதையடுத்து, மாகாணப் பேரவையில் அந்தக் கட்சியின் பலம் 150 ஐ கடந்துள்ளது என்று அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. இதில், இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள்தான் மிக அதிகமாக 101 இடங்களைக் கைப்பற்றினர். ஊழல் மற்றும் ரகசியக் காப்புறுதி மீறல் வழக்கில் இம்ரான் சிறைவைக்கப்பட்டுள்ளார். அவரது கட்சி தேர்தலில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது. இதனால், தேர்தலில் அவரது கட்சி வேட்பாளர்கள் சுயேச்சையாகப் போட்டியிட



வேண்டிய நிலை ஏற்பட்டது.

ராணுவத்தின் ஆசி பெற்றதாகக் கூறப்படும் பிஎம்எல்-என் கட்சி 75 இடங்களை மட்டுமே பெற்றது. முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவல் புட்டோ ஜர்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு (பிபிபி) 54 தொகுதிகள் கிடைத்தன.

அதிக இடங்களைக் கைப்பற்றியிருந்தாலும் பிஎம்எல்-என் கட்சியுடனோ, பிபிபி கட்சியுடனோ இணைந்து ஆட்சியமைக்கப் போவதில்லை என்று இம்ரான் கான் கூறிவிட்டார். அதையடுத்து, நவாஸ் ஷெரீபின் இளைய சகோதரர் ஷாபாஸ் ஷெரீப் தலைமையில் பிஎம்எல்-என் ஆட்சியமைக்கிறது. பஞ்சாப் மாகாணத்தில் நவாஸின் மகள் மரியம் நவாஸ் தலைமையில் அதே கட்சி ஆட்சியைமைக்கிறது. (04)

## காங்கிரஸ் கட்சியின் அனைத்து வங்கிக் கணக்குகளும் முடக்கம்!



இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் அனைத்து வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொருளாளர் அஜய் மக்கான் தெரிவித்துள்ளார்

தேர்தல் நன்கொடை பத்திரம் திட்டத்தை இந்திய உச்சநீதிமன்றம் நேற்று ரத்து செய்த நிலையில், காங்கிரஸின் அனைத்து வங்கிக் கணக்குகளையும் வருமான வரித்துறையினர் முடக்கியுள்ளனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு வருமான வரிக் கணக்கை 45 நாள்கள் தாமதமாக தாக்கல் செய்ததற்காக வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் பொருளாளர் செய்தியாளர்களிடம் தகவல் வழங்கியபோது, காங்கிரஸ் கட்சியின் இளைஞரணி, மகளிரணி உள்ளிட்ட அனைத்து வங்கிக் கணக்குகளும் வருமான வரித்துறையால் முடக்கப்பட்டுள்ளதாக நேற்று தகவல் கிடைத்தது. இந்த கணக்குகளை மீட்க ரூ. 210 கோடி அபராதம் விதித்துள்ளது வருமான வரித்துறை.

தேர்தலுக்காக பொது மக்களிடம் இருந்து காங்கிரஸ் திரட்டிய நிதியும் அந்த வங்கிக் கணக்குகளில் தான் இருக்கிறது. தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக எதிர்க்கட்சிகளின் வங்கிக் கணக்குகள் முடக்கம் என்பது ஜனநாயகத்தை முடக்கியதற்கு சமம், எனத் தெரிவித்துள்ளார். (04)

## பயப்படவேண்டாம் மோடி! ராகுல் காந்தி எதிர்வினை



இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதற்கு அக்கட்சியின் எம்பி ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு, வருமான வரிக் கணக்கை 45 நாள்கள் தாமதமாக தாக்கல் செய்ததற்காக வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் மக்களிடம் இருந்து தேர்தல் நன்கொடை பெறுவதற்காக சமீபத்தில் தொடங்கப்பட்ட இணையத்தளம் மூலம் பெறப்பட்ட தொகையும் அந்த வங்கிக் கணக்கில் உள்ளதாக அக்கட்சியின் பொருளாளர் அஜய் மக்கான் தெரிவித்துள்ளார்.

மேலும், காங்கிரஸின் இளைஞரணி, மகளிரணி உள்ளிட்ட வங்கிக் கணக்குகளை மீட்பதற்கு ரூ. 210 கோடி அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எக்ஸ் தளத்தில் ராகுல் காந்தி வெளியிட்ட பதிவில், பயப்பட வேண்டாம் மோடி! பணத்தால் உருவானது அல்ல காங்கிரஸ், மக்கள் பலத்தால் உருவானது. சர்வாதிகாரத்தின் முன் நாங்கள் ஒருபோதும் பணிந்ததில்லை, தலை வணங்கவும் மாட்டோம். இந்தியாவின் ஜனநாயகத்தை காக்க ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டரும் நகமும் சதையுமாகப் போராடுவார்கள்!, எனத் தெரிவித்துள்ளார். (04)

## உக்ரைன் நடத்திய பதில் தாக்குதலில் ரஷ்ய எல்லை நகரில் 6 பேர் உயிரிழப்பு



தங்கள் நாட்டின் மீது ரஷ்யா நடத்திய தீவிர ஒறிகணைத் தாக்குதலுக்குப் பதிலடியாக அந்த நாட்டின் எல்லை நகரில் உக்ரைன் நடத்திய தாக்குதலில் 6 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தகவல் வழங்கும் அதிகாரிகள் தெரிவித்தபோது, உக்ரைனில் 24 க்ரூஸ் மற்றும் பலிஸ்டிக் வகை எறிகணைகளை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தியது. நள்ளிரவில் வீசப்பட்ட அந்த கணைகள் வடகிழக்கு உக்ரைனின் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்ததில் பொதுமக்கள் 5 பேர் உயிரிழந்தனர்.

அதற்குப் பதிலடியாக, ரஷ்ய எல்லை நகரான பெல்கராலில் உக்ரைன் வியாழக்கிழமை ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் ஒரு குழந்தை உள்பட 8 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர், என்று கூறினர்.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவது தங்களது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கூறி வருகிறது. இந்த நிலையில், அதிபர்ஸெலென்ஸ்கி தலைமையிலான உக்ரைன் அரசு நேட்டோவில் இணைய ஆர்வம் காட்டியது. அதையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியில் 4 பிரதேசங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது.

அந்தப் பிரதேசங்களில் எஞ்சிய பகுதிகளையும் கைப்பற்றுவதற்காக ரஷ்யாவும், ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை மீட்பதற்காக உக்ரைனும் தொடர்ந்து போரிட்டு வருகின்றன. (04)

## லெபனானில் வான்வழித் தாக்குதல் இஸ்ரேலுக்கு ஹிஸ்புல்லா எச்சரிக்கை!

தங்கள் நாட்டில் வான்வழித் தாக்குதல் நடத்தி மிகப் பெரிய உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய இஸ்ரேலுக்குக் கடுமையான பதிலடி கொடுக்கப்படும், என்று லெபனானின் ஹிஸ்புல்லா ஆயுதக் குழு எச்சரித்துள்ளது.

முன்னதாக, லெபனானில் இருந்து வீசப்பட்ட ஏவுகணை இஸ்ரேலில் வெடித்துச் சிதறி ராணுவ வீரர் ஒருவர் புதன்கிழமை உயிரிழந்தார்.

சில மணி நேரத்தில், அந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக லெபனானின் நபாடியே நகரிலும், ஒரு கிராமத்திலும் இஸ்ரேல் ராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் பொதுமக்கள் 10 பேர் உயிரிழந்தனர்.

காஸா போர் தொடங்கியதிலிருந்து லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒரே நாளில் இத்தனை பேர் உயிரிழந்திருப்பது இதுவே முதல்முறையாகும். (04)

# இறக்காமத்தில் சமுதாய சீர்திருத்தக் குழு தொடர்பான செயற்குழுக் கூட்டம்





(எம்.எம்.ஜெஸ்மின்)

பிரதேச மட்ட சமுதாய சீர்திருத்தக் குழு, சிறுவர் கண்காணிப்பு மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான செயற்குழு கூட்டம் இறக்காமத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள், அவர்களின் பாதுகாப்பு, அரோக்கியம் என்பவை தொடர்பாக காலாண்டுக்கு ஒருமுறை இக்கூக்கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் பிரதேச மட்ட சமுதாய சீர்திருத்தக் குழு, சிறுவர் கண்காணிப்பு மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான செயற்குழு கூட்டம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் இறக்காமம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் குற்றச் செயல்கள் தொடர்பில் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து அவை தொடர்பில் சமூக மட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அம்பாரை நீதிமன்ற நீதிபதி அவர்கள் விஷேட உத்தரவையடுத்து மாவட்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் என்.எம். இக்ராம் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி வி.யஷோதா ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடை விலகள், கல்வி ரீதியான பிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பாவனை, இளவயது திருமணம், சிறுவர்களின் சுகாதார மேம்பாடு, விஷேட தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல் தொடர்பான விடயங்கள் மற்றும் சமுதாய சீர்திருத்தக் குழு, கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் 2024 ஆம் ஆண்டு வருடத்திற்கான செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மேலும், பால்நிலை வன்முறை மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரதேச மட்டத்தில் தங்கள் அமைப்பு சார்ந்த வேலைத்திட்டங்கள், குடும்ப வன்முறை, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்கள் அவற்றை குறைப்பதற்கும் தடுப்பதற்கும்மான நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

மேற்படி கூட்டத்திற்கு குவாசி நீதவான் சட்டத்தரணி எஸ்.எல். பாறூக், பிரதேச சபை செயலாளர் எல்.எம். இர்பான், சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எம். என்.எப். றஸ்கா ஆஸ்மி, பொலிஸ் நிலைய நிருவாக பொறுப்பதிகாரி எம்.வை. ஜௌபர், எச்.பி. யசரட்ன பண்டார, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எல். நௌபீர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் டி. கே. ரஹ்மதுல்லாஹ் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ. சபீர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் சிறுவர், சமய நிறுவனங்களின் தலைவர்கள், ஜமிய்யதுல் உலமா சபை, பொதுச் சுகாதார பரிசோதகர், இஸ்லாமிக் ரிலீப், மனித எழுச்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள், மகளிர் சங்க பிரதிநிதிகள், கிராம மட்டத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ.ஆர். றியாஸ், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். முஹம்மட் இம்டாட், பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர்.

# கார்மேல் பற்றிமாவில் பொங்கல் விழா!





(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த தைப்பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில் நடைபெற்றது..

மாட்டுவண்டி வலத்துடன் பாரம்பரிய முறைப்படி நடைபெற்ற பொங்கல் விழாவின் அதிதிகளாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் மகப்பேறு வைத்திய நிபுணர் கோ.வசந்தராஜா, அம்பாறை நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் திருமதி புவிராஜினி விஷ்ணுரூபன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, கல்முனை ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளர் ஏ. நிர்மலகுமார், பற்றிமா 125 வது ஆண்டு விழாக்குழு பொருளாளர் எஸ்.சிறிரங்கன் ஆகியோர் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டார்கள்.

அங்கு பற்றிமா பழைய மாணவர்களான வைத்திய கலாநிதி வசந்தராஜா, பொறியியலாளர் புவிராஜினி ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டாரர்கள்.



# இலங்கையில் ஆரோக்கியமான சுற்றுலா மேம்படுத்தலுக்கான ஜேர்மன் குழு வருகை





இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இணைந்து செயலாற்றும் திட்டத்தின் கீழ், இலங்கையில் ஆரோக்கியமான சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக முதல் ஜேர்மன் குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. இவர்கள் சமூக ஊடகங்களில் தமக் கிருக்கும் பிரபலத்தைப் பயன்படுத்தி, விளம்பரப்படுத்தல் களில் ஈடுபட்டு வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பிரான்சில் உள்ள மக்கள் தொடர்பு நிறுவனமான Interface tourism மூலம் இந்தக் குழுவினர் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிப்பொன் பெயின்ட் நிறுவனத்தின் பிரஜா சத்கர மக்கள் சேவைத் திட்டம்







கொழும்பு, பெப். 16

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் புதிய கட்டடத் திறப்பு மற்றும் நிப்பொன் பெயின்ட் நிறுவனத்தினால் இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கும் பிரஜா சத்கர மக்கள் சேவைத் திட்ட நிகழ்வுகள் இன்று நடைபெற்றிருந்தன.

இந்த நிகழ்வில் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன்ஈ பொலிஸ் உயரதிகாரிகள், சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள், கொழும்பு மாநகரசபை மற்றும் நிப்பொன் நிறுவன அலுவலர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## வவுனியாவில் கிணற்றில் இருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

வவுனியா, வீரபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பம் ஒன்றுக்குள் ஏற்பட்ட வாய்தர்க்கத்தையடுத்து கணவனான இளம் குடும்பஸ்தர் வீட்டில் இருந்த கிணற்றுக்குள் குதித்துள்ளார்.

இதனையடுத்து, மனைவியும், பிள்ளைகளும் அயலில் உள்ளவர்களை அழைத்து மீட்க முயற்சித்தனர். இதன்போது கிராம அலுவலர் மற்றும் பொலிசாருக்கும் அயலவர்கள் முறைப்பாடு செய்தனர்.

அப் பகுதி மக்களின் துணையுடன் அவர் மீட்கப்பட்ட போதும், அவர் உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளார். இதனையடுத்து சடலம் செட்டிகுளம் வைத்தியசாலையில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டதுடன், அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய செபமாலை மொரிசன் என்பவரே மரணமடைந்தவராவார். சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)








## 2024 ஆம் கல்வி ஆண்டுக்கான நியமனங்கள் வழங்கிவைப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய பாடசாலையின் 2023 ஆம் கல்வி ஆண்டுக்கான இறுதி ஆசிரியர்கள் ஒன்று கூடல் அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அமுலாக்கல் திட்டம் ஆசிரியர்களிடத்தில் முன்வைக்கப்பட்டது.

பாடசாலையின் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான நியமனங்களும் கடமைப் பொறுப்புக்களும் அதிபரால் ஆசிரியர்களுக்கு கையளிக்கப்பட்டது.

இந்நியமனங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அமுலாக்கல் திட்டத்திற்கு அமைவாக பாட, இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் அனைத்தும் வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் முன்னெடுத்துச் செல்லப்படும் என அதிபர் தெரிவித்தார்.

புதிய கல்வி ஆண்டு எதிர்வரும் திங்கட் கிழமை (19) ஆரம்பமாகும் நிலையில் இந்த நியமனங்களை ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



## சாதாரண தர மாணவர்களுக்கு இலவச துரித மீட்டல் வகுப்புகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நயன வாசலதிலக அறக்கட்டளை மூலம் இவ்வருடம் பரீட்சைக்கு தோற்றவுள்ள க.பொ.த.சாதாரண தர வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த 220 மாணவர்களை இலக்காகக் கொண்டு இந்த இலவச கல்விச் சேவை நடத்தப்பட்டதுடன் மாதிரி வினாப்பத்திரங்களும் பயிற்சிகளும் பிரதேசத்தில் பிரபலம் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயம், பூனாகலை தமிழ் மகா வித்தியாலயம், கொஸ்லந்தை ஸ்ரீ கணேசா மத்திய மகா வித்தியாலயம், ஹல்தமுல்ல தமிழ்த் தேசியப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்த துரித மீட்டல் வகுப்புகளில் பங்கேற்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.02.2024 இல் வெளியிடப்பெற்றது.